மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2021 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 16ஆம் நாள் செவ்வாய்க் கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.வி.லட்சுமி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 468/2018 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. சண்முகம் | வயது | .. 64 |
| த/பெ. | .. ரங்கசாமி கவுண்டர் | சாதி | .. |
| கிராமம் | .. சேத்பட் | சமயம் | .. |
| தாலுக்கா | .. சேத்பட் | தொழில் | .. விவசாயம் |

16.11.2021 - வா.சா.1 முதல் விசாரணை.

நான் இந்த வழக்கில் 1ம் வாதி. நான் எனது முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அதில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். படித்துப் பார்த்து தான் கையெழுத்து போட்டேன். 16.03.1961 தேதியில் வழக்கு சொத்தினை வாதிகளின் தந்தை ரங்கசாமி என்பவர் கிரையம் பெற்ற கிரையப் பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.1. 09.10.2001 தேதியில் வாதிகளின் தந்தை வழக்கு சொத்தினை வாதிகளின் பெயரில் எழுதி வைத்த பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.2. 19.04.2002 தேதியிட்ட வழக்கு சொத்து குறித்து வாதிகளின் பெயரில் உள்ள பட்டா புத்தகம் வா.சா.ஆ.3. சிட்டா மற்றும் அடங்கல் வா.சா.ஆ.4. அரசு செலுத்திய வரி ரசீது வா.சா.ஆ.5. வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் வம்சா வழிப்பட்டியல் வா.சா.ஆ.6. ஐ.ஏ.628/2009 என்ற எண்ணில் இறுதிநிலை தீர்ப்பாணை கோரி பிரதிவாதிகள் தாக்கல் செய்த மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் நகல் வா.சா.ஆ.7. வாதி தரப்பில் மேலும் சில ஆவணங்களை குறியீடு செய்வதற்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

(Sd)/-D.Ravi,
District Munsif,

Polur.